IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, SALEM.

RTROP.No.428/2023

CW-1 is solemnly affirmed on 13.11.2025 in accordance with the provisions of the Oaths Act No.44 of 1969.

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவகுமார் | Caste | : |
| S/o. | : ராமசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

முதல் விசாரணை :

நான் மனுவில் கோருநர். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். அதில் உள்ள கையொப்பம்என்னுடையதுதான்.

1. 23.08.2021 தேதியில் தனி மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிய தீர்ப்பாணை எண்.77/2020 (நெ.சா.எண்.86) 94.33 ச.மீட்டர் – அசல் – Ex.C1
2. 28.03.2022 தேதியில் தனி மாவட்ட வருவாய் அலுவலரிடம் நான் 94.33 ச.மீட்டருக்காக செய்த மேல்முறையீடு – நகல் – Ex.C2

3. மேல்முறையீட்டு மனுவை தனி மாவட்ட வருவாய் அலுவலர் பெற்றுக்கொண்டதற்கான இணைய வழி ரசீது – கணினி நகல் – Ex.C3
4. 24.03.2004 தேதியிட்ட ஆர்ஜிதம் செய்யப்பட்ட எனது நிலத்திற்கான எனது பெயரில் உள்ள கிரயப்பத்திரம் – சான்றிட்ட நகல் – Ex.C4
5. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கான எனது பெயரில் உள்ள பட்டா – கணினி நகல் – Ex.C5
6. 06.09.2021 தேதியிட்ட எனது நிலத்திற்கு அருகில் உள்ள பார்கவி என்பவருக்கு தீர்ப்பாணை எண்.81/2020ன் படி சதுர மீட்டருக்கு ரூ.1400.32 வழங்கப்பட்ட தீர்பபாணை – நகல் – Ex.C6
7. 01.04.2023 தேதியிட்ட எனது நிலத்திற்கு அருகில் உள்ள ச.எண்.66/10 மற்றும் ச.எண்.66/4C பிரிவுகளில் அரசு வழிகாட்டு மதிப்பு ச.மீ.ரூ.1400 என நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீடு – பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் – Ex.C7
8. என்னுடைய ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. மேற்படி நகல் – Ex.C8

மனுப்படி உத்தரவாக கோருகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

சிக்கம்பட்டி கிராமத்தில் எனக்கு எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் 25 செண்ட் உள்ளது. அதில் என்ன விவசாயம்

செய்து வந்தேன் என்றால் சோளம், கம்பு விவசாயம் பயிர்கள் பயிரிட்டு வந்தேன். ஓமலூர் நகரத்திலிருந்து எத்தனை கிலோ மீட்டர் தள்ளி எனது கிராமம் உள்ளது என்றால் 4 கிலோமீட்டர் தள்ளி உள்ளது. நில ஆர்ஜித அதிகாரி நில ஆர்ஜிதம் சம்மந்தமாக என்னை விசாரித்து ஆவணங்கள் பெற்றுக்கொண்டு நிலத்தின் மதிப்பை நிர்ணயித்து அதற்கான மதிப்பை கொடுத்துவிட்டார்கள் என்றால் சரி.

நிலத்தின் மதிப்பை அதிகமாக கோருவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆர்ஜித நிலமானது 2004ம் வருடம் கிரயம் பெற்ற சொத்து என்றால் சரி. நில ஆர்ஜிதம் சம்மந்தமாக அறிவிப்பு வெளியிட்ட தேதிக்கு முந்தைய 3 வருடங்களுக்கான விற்பனை விவரங்களில் நிலத்தின் மதிப்பு அதிகம் என காட்ட எந்த ஆவணமும் இல்லாமல் நிலத்தை மதிப்பை அதிகப்படுத்த கோரும் பரிகாரம் நிராகரிக்கதக்கது என்றால் சரியல்ல.

Ex.C7 அரசு வழிகாட்டி மதிப்பு 1.4.2023 தேதியில் உள்ள நிலத்தின் மதிப்பு என்றும் நில ஆர்ஜித தேதிக்கு முந்தைய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எனது நிலத்திற்கு பக்கத்தில் வணிக வளாகம், ஓட்டல், மளிகை கடை, ரைஸ் மில் ஆகியவை உள்ளது என காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அருகாமையில் கடைகள் உள்ளன. எனது நிலத்தின் அருகே ஏற்கனவே சென்று கொண்டிருந்த நெடுஞ்சாலையை 4 வழி சாலையாக விரிவாக்கம் செய்வதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரி. நான் சாத்தப்பாடி கிராமத்தில் குடியிருக்கிறேன். ஆர்ஜிதம் செய்த நிலத்திலிருந்து 6, 7 கிலோமீட்டர்

தள்ளி நான் குடியிருக்கும் கிராமம் உள்ளது. நிலத்தை வாங்கும்போதே விவசாய நிலமாக வாங்கினேன் என்றும், வீடு கட்டுவதற்காக வாங்கியதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிலத்தின் மதிப்பு ஏற்கனவே சரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் நிலத்தின் மதிப்பை அதிகமாக்க கோரி உள்ள கோரிக்கை நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.